Bharatanatyam, a classical dance form rooted in the temples of Thanjavur has its origins traced back to Sadirattam. The word Bharatanatyam is composed of three terms, Bha - bhava (expression), Ra - raga (melody), and Ta - tala (rhythm). It as an art form that unifies theatre, music, literature, and poetry in one.

ஆரம்ப காலத்தில் தஞ்சாவூர் கோவில்களில் நிகழ்த்தப்பட்ட செவ்வியல் நடனமான பரத நாட்டியத்தின் தொடக்கம் சதிராட்டத்தோடு தொடர்புடையது. பரத நாட்டியம் என்ற சொல் பாவம், ராகம், தாளம் என்ற மூன்று சொற்களின் தொகுப்பு. இது நாடகம், இசை, இலக்கியம், கவிதை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒப்பற்ற கலை வடிவம்.

THERUKOOTHU

Therukoothu which translates to street play is an informal dance perfomance, performed for centuries by artists dressed in vibrant costumes and elaborate makeup that depicts scenes from ancient Tamil Sangam literature. Beyond entertainment, it is a sublime expression of culture.

தெருக்கூத்து என்பது கண்கவர் உடையோடு, நுட்பமான ஒப்பனை செய்த கலைஞர்கள், பண்டைய சங்கத்தமிழ் இலக்கியக் காட்சிகளை தெருவில் சித்தரிக்கும் நடன நிகழ்ச்சி. இது பொழுதுபோக்கையும் தாண்டிய பாங்கான பண்பாட்டு வெளிப்பாடு.

THEVAR ATTAM

Thevar attam is a beautiful folk art form of Tamil Nadu, also known as the celestial dance of the Devas (demigods). It is an indigenous dance form of the Kambala Nayakars. It is performed during various religious and life-events such as child-birth, puberty, marriage, and death and is an integral part of the community.

இது தேவர்களின் தெய்வீக ஆட்டம் எனப் பொருள்படும் தமிழ்நாட்டின் அழகிய கலை வடிவம். கம்பாள நாயக்கர்கள் நிகழ்த்தும் பாரம்பரிய நடனம். மத நிகழ்ச்சிகளிலும், பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், மரணம் போன்ற வாழ்வியல் நிகழ்ச்சிகளிலும் ஆடப்படும் இந்த நடனம் சமுதாயத்தோடு ஒன்றிணைந்த ஒரு அங்கம்.

PONGAL FESTIVAL

Pongal, a 4-day long Tamil festival marks the season of harvest for the agricultural community. The festival revolves around the idea to thank nature for being the source of energy for the trade of agriculture including the sun, cows, bulls, and other domestic animals that assist them.

பொங்கல் என்பது அறுவடைக் காலத்தை உழவர்களுக்கு அடையாளப்படுத்தும் நான்கு நாட்கள் கொண்டாடப்படும் தமிழர் திருவிழா. இது உழவுக்கும் தொழிலுக்கும் உதவும் சக்தியின் மூலமான இயற்கைக்கும், சூரியன், பசுக்கள், எருதுகள் மற்றும் வீட்டு விலங்குகள் ஆகியவற்றுக்கு நன்றி செலுத்தும் விழா.

JALLIKATTU

Jallikattu originally called eru thazhuvuthal which translates to bull embracing, is an event that takes place on the third day of the Pongal festival. It's an age-old tradition that originated in the Marutham landscape (croplands) of Tamil Nadu to celebrate the vigour of the exuberant Tamil bulls. A bull is let free in a semi open arena, and the participants attempt to embrace it. Alanganallur, Avaniyapuram and Palamedu are some of the famous venues.

காளையைத் தழுவுதல் எனும் பொருளில் 'ஏறு தழுவுதல்' என தொடக்கக் காலத்தில் அழைக்கப்பட்ட இந்த விழா, பொங்கல் பண்டிகையின் மூன்றாம் நாளில் நடக்கிறது. இது சீறும் காளைகளின் வலிமையைக் கொண்டாட மருதம் நிலப்பரப்பில் தொடங்கப்பட்ட பண்டைய பாரம்பரியம். வெட்டவெளியில் விடப்பட்ட காளைகளை போட்டியில் பங்கேற்கும் காளையர் தழுவ முயற்சி செய்வர். அலங்காநல்லூர், அவனியாபுரம் மற்றும் பீளமேடு ஆகியன இந்த நிகழ்ச்சிக்கான புகழ்பெற்ற நிகழ்விடங்கள்

TANJORE PLATES

First created in the 18th century as a gift for the Maratha ruler Rajah Serfoji. This craft has been passed on for generations. Tanjore Plates are a unique blend of three different metals - silver, copper, and brass. Intricate patterns and figurines of deities are embossed and stuck on to a base plate.

மராட்டிய சரோபோஜி மன்னருக்கான பரிசுப் பொருளாக 18 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. பல தலைமுறைகள் கடந்து நீடிக்கும் இந்த கைவினைக்கலை வெள்ளி, செம்பு, வெண்கலம் என மூன்று உலோகங்கள் சேர்ந்து உருவாகும் தனித்துவமானது. நுட்பமான வடிவங்களும் தெய்வ உருவங்களும் பொறிக்கப்பட்டு அவை அடித்தகட்டுடன் இணைக்கப்படுகின்றன.

PARAVAI KAVADI

The tradition of Paravai Kavadi named aptly is a type of Kavadi that replicates the flying position of a bird. Usually performed during the Thaipusam festival of Lord Murugan, it involves deities being carried in the festival processions, suspended with the help of piercings on various parts of their body with curved silver needles.

பறக்கும் பறவையின் வடிவம் கொண்ட காவடி என்பதால் இப்பெயர் வழக்கப்பட்டது. முருகனின் தைப்பூசத் திருவிழாவில் நிகழ்த்தப்படுகிறது. வளைவான வெள்ளி ஊசிகளை உடலின் பல இடங்களில் குத்தித் தொங்கிய நிலையில் பண்டிகையில் ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

KULASAI DUSSEHRA

The hamlet of Kulasekarapattinam, transforms into a new avatar all together, for the 10-day long festival of Dussehra. Lakhs of devotees, donning elaborate costumes and guises that are interpretations of the form of Amman, gather here to partake in the celebrations.

குலசேகரப் பட்டணம் என்ற குக்கிராமம் பத்து நாட்கள் நடக்கும் தசராப் பண்டிகையின் போது முற்றிலும் புதியதாய் உருமாற்றம் அடைகிறது. அம்மன் போல அலங்கார ஆடைகள் அணிந்த லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த விழாவில் பங்கேற்கக் கூடுகின்றனர்.

ALAGU KUTHAL

Alagu kuthal is an ancient tradition performed by Tamil devotees on festivals associated with Lord Murugan and Tamil goddesses Mariamman and Kaliamman. It's a practice where devotees offer their prayers by piercing either their tongues, cheeks, shoulders, and body with metal needles that either have a vel or tirisulam on one side.

முருகன், மாரியம்மன், காளியம்மன் போன்ற தமிழ் தெய்வங்களுக்கான பண்டிகைகளில் நிகழ்த்தப்படும் பழமையான பாரம்பரிய வழக்கம். வேல், திரிசூலம் பொருத்தப்பட்ட உலோக ஊசிகளை நாக்கு, கன்னம், தோள் மற்றும் உடலில் குத்தி பக்தர்கள் வழிபாடு செய்வார்கள்.

POI KAAL KUDHIRAI

This vibrant traditional folk dance that's associated with the worship of God Ayyanar is usually performed by a pair of dancers impersonating a King and Queen. It consists of dancers wearing a decorated fake horse shell around their hips and fake wooden legs that replicate the sound of horses while dancing.

ராஜா, ராணி போல வேடமிட்ட இரண்டு நடனக் கலைஞர்கள் நிகழ்த்தும் துடிப்பான இந்த நாட்டுப்புற நடனம் அய்யனார் வழிபாட்டோடு தொடர்புடையது. அலங்கரிக்கப்பட்ட குதிரை வடிவிலான கூட்டை இடுப்பிலும், மரக்கால்களையும் பொருத்திய நடனக்கலைஞர்கள் குதிரை ஆடுவது போன்ற ஒலியோடு நிகழ்த்தும் நளினமான நடனம் இது

TANJORE PAINTINGS

This distinct traditional art painted on jackfruit or teak wooden planks with natural dyes, bright primary colours, embellished with gold foil, pearls, diamonds, and other precious gemstones is a celebration of Thanjavur's rich and artistic tradition. They draw inspiration from the never-ending mythological stories of Tamil Nadu.

பலா மற்றும் தேக்கு மரப்பலகை மேல் இயற்கை சாயம் மற்றும் பிரகாசமான வண்ணங்கள் தீட்டி, தங்கப் பூச்சு, முத்து, வைரம், விலையுயர்ந்த மணிகள் போன்றவற்றால் அலங்கரிக்கும் தனித்துவமான இந்த பாரம்பரியக் கலை தஞ்சாவூரின் செழுமையான கலைப்பாரம்பரியத்தின் களிப்பான வெளிப்பாடு. முடிவற்ற தமிழக புராணக்கதைகளே இவற்றின் கருப்பொருள்கள்

KANI TRIBE

The indigenous Kani tribe or Kanikkarans live in the Western Ghats of Kanyakumari and Tirunelveli district. This community cultivates lemon, cashew, jack fruit, tapioca, pepper, and harvests minor forest produces like amla, honey, etc. They're said to have distinctive wedding rituals and dances and also use sustainable and harmless tools to scare various wild animals and birds from their fields.

காணி பழங்குடியினர் அல்லது காணிக்காரர்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வசிக்கின்றனர். இந்த சமுதாயத்தினர் எலுமிச்சை, முந்திரி, பலா, மரவள்ளி, மிளகு போன்றவற்றை விளைவித்து நெல்லி, தேன் ஆகிய வனப்பொருட்களையும் சேகரிக்கின்றனர். வித்தியாசமான திருமண சடங்குகள், நடனங்களைக் கொண்ட இவர்கள் பறவைகளையும் வனவிலங்குகளையும் வயல்களிலிருந்து விரட்டும் அபாயமில்லாத ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்.

KAVADI ATTAM

Kavadiattam is performed when pilgrims set out on their pilgrimage to the abode of Lord Murugan during 'Thai Poosam'. Performed only by men the Kavadis are decorated with bamboo strips that are bent like a half-moon, which is covered with colourful silk, Zari cloth and peacock feathers. It is performed to worship Lord Murugan and is accompanied by Pambai and Naiyandi Melam.

இது தைப்பூசத்தின் போது முருகன் ஆலயங்களுக்கு புனித யாத்திரை செல்லும் ஆண் பக்கர்களால் நிகழ்த்தப்படுகிறது. காவடி அரை நிலவு வடிவில் வளைக்கப்பட்டு, வண்ணப் பட்டு சரிகை மற்றும் மயிலிறகால் அலங்கரிக்கப்படுகிறது. இந்த நடனம் பம்பை, நையாண்டி மேளங்களின் இசையோடு முருகக் கடவுளை வழிபடும்போது ஆடப்படுகிறது.

OYILATTAM

Oyilattam draws inspiration from the practice of people waving pieces of cloth to shoo the birds away from eating the grains during harvest. The dancers portray the folk and mythological stories from epics like Mahabharata, Ramayana, and the stories of Lord Murugan. It is mainly performed in temple festivals and on other auspicious occasions.

அறுவடைக்காலத்தில் பறவைகளை துணி அசைத்து விரட்டும் வழக்கதிலிருந்து உருவானது. மகாபாரதம், ராமாயணம் போன்ற இதிகாசங்கள், முருகக் கடவுள் கதைகள் போன்றவற்றின் காட்சிகளை கலைஞர்கள் நடனத்தில் சித்தரிக்கின்றனர். இது கோவில் திருவிழாக்களிலும், மங்கள நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப்படுகிறது.

MUSEUMS

CHENNAI MUSEUM - VISIT

Hon'ble Minister for Industries, Tamil Official Language & Tamil Culture and Archaeology visited the District Government Museum, The Nilgiris on 05.08.2021

மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் சுதந்திர போராட்ட வீரர்களின் ஓவியம் மற்றும் புகைப்படம் மற்றும் ஆதிச்சநல்லூர், கீழடி அரும்பொருட்களின் சிறப்பு கண்காட்சியை 09.08.2021 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

TOUCH TABLE - ADICHANALLUR

Hon'ble Minister for Industries, Tamil Official Language & Tamil Culture and Archaeology inaugurates – "The Adichanallur Touch Table" on 30.07.2021 in District Government Museum, Tirunelveli

திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில், மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் "ஆதிச்சநல்லூர் தொடு திரையை" 30.07.2021 அன்று துவைக்கி வைத்தார்.

JEWEL BOX

This Jewel box is found in the Maharajah Serfoji II Memorial Hall Museum, in Tanjore. The box is completely made of silver with very intricate designs. The jewel box belongs to the 18th century.

இந்த நகைப் பெட்டி தஞ்சாவூரில் உள்ள இரண்டாம் சரபோஜி மகாராஜா நினைவு அருங்காட்சியகத்தில் உள்ளது. 18ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்தவெள்ளி நகைப்பெட்டி மிகவும் சிறப்பான வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

BOOMERANGS

Boomerangs were the traditional war tools of the Sivagangai and were used in hunting and warfare. The Maruthupandiyars, the diarchal kings of the Sivagangai region were highly specialised in the art of boomerang throwing. The boomerangs are usually made of wood, metal and ivory and are made in two types, returnable and non returnable.

வளரிகள் சிவகங்கை மண்ணின் மரபார்ந்த போர்க்கருவிகளாகும். வளரிகள் வேட்டையிலும், போரிலும் பயன்படுத்தப்பட்டன. சிவகங்கையைச்சேர்ந்த மருதுபாண்டியர்கள் வளரி வித்தையில் நிபுணத்துவம் பெற்றவர்கள். வளரிகள் மரத்தாலும், உலோகத்தாலும், தந்தத்தாலும் ஆனவை. வளரியில் திரும்பி வரக்கூடியது மற்றும் திரும்பி வராதது என இரண்டு வகைகள் உள்ளன.

SHAKUNTALA

It is an oil painting on canvas by Raja Ravi Varma in 1898. It was acquired by the Chennai Museum in 1901. This painting illustrates an episode from Kalidasa's Sanskrit Play by the same name. She is sitting under the Palmyrah tree in an arid land-scape lost in thoughts. Sage Dhurvasa is seen in the backdrop.

1898 ஆம் ஆண்டு ராஜா ரவி வர்மாவால் துணியின் மீது எண்ணெய் வண்ணத்தில் வரையப்பட்ட ஓவியமாகும் . இது 1901 ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்டது. இந்த ஓவியம் இதே பெயரில் காளிதாசரின் சமஸ்கிருத நாடகத்தின் ஒரு அத்தியாயத்தை விளக்குகிறது அவள் வறண்ட நிலப்பரப்பில் பனை மரத்தடியில் கீழே அமர்ந்துள்ள அவரது முகத்தோற்றம் எதையோ இழந்தது போன்ற கவலையுடன் உள்ளது. இவரின் பின்புறம் துர்வாச முனிவர் காணப்படுகிறார்.

TIRUVALANGADU COPPER PLATES

1905 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட இந்த மிகப் பெரிய செப்பேடு 31 ஏடுகளைக்கொண்டுள்ளது. முதல் பத்து ஏடுகள் சோழர் மன்னர்களின் பரம்பரை குறித்த முக்கியமான தகவல்களை சமஸ்கிருதத்திலும் அடுத்த 21 ஏடுகளில் மன்னரின் ஆணைகளும் கொடை வழங்கிய போது இருந்த கிராம எல்லைகளும் தமிழில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. (கி.பி.1016-1017)

These copper plates were discovered in 1905 C.E. It contains 31 copper plates and are the largest recovered in Tamil Nadu. The first ten plates are in Sanskrit and give valuable information about Chozha genealogy; the next 21 plates are in Tamil and register the order of the Kings and specify the boundaries of the villages at the time of the grant (1016 – 1017 C.E.).

SARASWATI MAHAL LIBRARY

The Saraswati Mahal Library, which was the personal library of the Maratha Dynasty has innumerable scriptures that belong to a bygone era. There are manuscripts in Tamil, Telugu, Sanskrit and Marathi. The library now functions as a museum and a preservation centre.

மராட்டிய அரச வம்சத்தின் தனிப்பட்ட நூலகமாக இருந்த சரஸ்வதி மகால் நூலகத்தில் பழமையான எண்ணற்ற சுவடிகள் உள்ளன. தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மற்றும் மராத்தி மொழிகளில் ஓலைச்சுவடிகள் உள்ளன. இந்த நூலகம் தற்போது அருங்காட்சியகமாகவும் பாதுகாப்பு மையமாகவும் செயல்படுகிறது.

IVORY CONTAINER



The Ivory figurines from South India belong to 17th and 18th centuries .The South Indian ivory carvings generally have rounded and smooth figures that contrast with the sharp free etched details of the costume headdress and jewels. The box is an excellent specimen of Vishakapattinam style of such artistic work.

தென்னிந்தியாவின் ஐவரி சிலைகள் 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை .தென்னிந்திய தந்தத்தின் சிற்பங்கள் பொதுவாக வட்டமான மற்றும் மென்மையான உருவங்களைக் கொண்டுள்ளன, அவை ஆடை தலைக்கவசம் மற்றும் நகைகளின் கூர்மையான இலவச பொறிக்கப்பட்ட விவரங்களுடன் வேறுபடுகின்றன. விசாகப்பட்டினம் பாணியில் இத்தகைய கலைப் படைப்புகளின் சிறந்த எடுத்துக்காட்டு பெட்டி.

TANJORE MUSEUM

The Royal Palace Museum has a collection of 17th century paintings of Tanjore and around the world. It also has the personal collection of books, arte-facts and personal items of the Maratha rulers that ruled the Tanjore Kingdom.

தஞ்சாவூர் அரண்மனை அருங்காட்சியகத்தில் தஞ்சாவூர் மற்றும் உலகெங்கிலும் உள்ள 17ஆம் நூற்றாண்டின் ஓவியங்கள் உள்ளன . மேலும், இங்கு தஞ்சையை ஆண்ட மராட்டிய ஆட்சியாளரின் புத்தகங்கள் , கலை பொருட்கள் மற்றும் தனிப்பட்ட பொருட்கள் ஆகியவை உள்ளன .

HERO STONE

A hero stone is a memorial commemorating the death of a hero in a battle. Since the sangam period hero stones are prevalent in Tamil Nadu. This hero stone was collected from Thiruchengode of Namakkal district. It was erected to commemorate the heroic death of a soldier during a war. It belongs to C.E. 1255.

போரில் வீரமரணம் அடைந்த வீரரின் நினைவைப் போற்றும் வகையில் வீரக்கல் எடுக்கப்படுகிறது. சங்ககாலம் முதல் எடுக்கப்பட்ட வீரக்கற்கள் தமிழ்நாட்டில் பரவலாக காணப்படுகின்றன. இந்த வீரக்கல் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் இருந்து சேகரிக்கப்பட்டது. இதன் காலம் கி.பி.1255 ஆகும்.

WEAPONS

The Maharajah Serfoji II Memorial Hall Museum, has a collection of weapons ranging from swords to spears. Each sword and weapon is made with the greatest of craftmanship and design.

இரண்டாம் சரபோஜி மகாராஜா நினைவு அருங்காட்சியகத்தில் வாட்கள் முதல் ஈட்டிகள் வரை உள்ளன. அவை நல்ல வடிவமைப்புடனும் மிகுந்த கலை நயமிக்க வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

TRIBAL MUSEUM

The Toda Tribe observe a buffalo - centred culture and inhabit the grass lands in and around the places such as Todha Naadu, Kundhaa Naadu, Perangaa Naadu, Maerku Naadu of the Nilgiris. They are tall, fair in complexion with aquiline nose and other clear physical features. Toda men usually have a long beard, thick mustache and abound body hair. Toda woman twist their hair into ringlet strands and allow them to fall gracefully over their shoulders. It is customary to tattoo their upper arm, shoulder and the portion below their neck.

நீலகிரியில்தோதநாடு, குந்தநாடு, பேரங்காநாடு, மேற்குநாடு போன்ற இடங்களிலும் அதை சுற்றியுள்ள புல்வெளிகளிலும் வசிக்கும் தோடர் பழங்குடியினர் எருமைகளை மையமாக கொண்ட கலாசாரத்தை கடை பிடித்து வருகின்றனர். அவர்கள் உயரமாகவும் எடுப்பான மூக்கு மற்றும் தெளிவான உடல்வாகுடன் காணப்படுகிறார்கள். தோடர் ஆண்கள் நீண்ட தாடி, அடர்த்தியான மீசை மற்றும் உடல் முடியைக்கொண்டுள்ளனர். தோடர் பெண்கள் தங்கள் தலை முடியைச்சுருள் வடிவில், கழுத்து மற்றும் தோள்பட்டைகள் மீது அழகாக விடுகின்றனர். மேலும் அவர்கள் மேற்புறகை, தோள்பட்டைகள் மற்றும் கழுத்துக்குக் கீழே பச்சை குத்திக்கொள்கின்றனர்.

ELEPHANT

The articulated skeleton shown here belongs to an Indian Elephant, *Elephas maximus*. This fully grown tusker was exceptionally large size, 11 feet in height, with a pair of enormous tusks.

இங்கு காணப்படும் இந்திய யானையின் எலும்புக்கூடு, 11 அடி உயரமுடைய நன்கு வளர்ந்த தந்தங்களை கொண்ட பெரிய யானையாகும்.

MEGALITHIC POTTERIES

ஆதிச்சநல்லூரின் பெருங்கற்கால ஈமப்புதைப்பிடங்கள் 114 ஏக்கர் பரப்பில் விரிந்து பரந்து காணப்படுகின்றன. ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால ஈமப்புதைப்பிடங்களில் சரளைக்கற்களடங்கிய மண் அல்லது கனத்த பாறையின் அடியில் ஈமத்தாழிகள் தனியாகவோ மிக அரிதாக இணைகளாகவோ வைக்கப்பட்டுள்ளன. மேலும், தாழிகளின் உள்ளேயும், வெளியிலும் பயன்பாட்டு மட்பாண்டங்கள் காணப்பட்டன.

The megalithic burial sites at Adichanallur cover an area of 114 acres. The burial urns of Adichanallur megalithic site were found either singly or more rarely in pairs, in pits excavated under the solid rock in the gravelly soil. Further, earthen ware utensils were also found both inside and outside of the urns.

LADY WITH MIRROR

It is an oil painting on canvas by Raja Ravi Varma in 1894. It was acquired by the Chennai Museum from Raja Pratapa Narasingiri in 1957. It shows a lady holding a mirror in her hand and combing her hairstyle.

இந்த ஓவியம் 1894 ஆம் ஆண்டு எண்ணெய் வண்ணத்தில் ராஜா ரவி வர்மா என்பவரால் வரையப்பட்டது. 1957 ஆம் ஆண்டு ராஜா பிரதாப நரசிங்கிரி என்பவரிடமிருந்து சென்னை அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டுள்ளது. இவ் ஓவியத்தில் ஒரு பெண்மணி கண்ணாடி முன் சிகை அலங்காரம் செய்வது போன்று வரையப்பட்டுள்ளது. பெண்ணின் சிகை அலங்காரம் மிகவும் அழகுடன் காட்சியளிப்பது ஓவியரின் தனித்தன்மை.

PANCHA MUKHA VADYAM

Pancha-Mukha-vadyam is a rare and big musical instrument. It is a huge bronze drum with five faces which is used in temple music. The five faces are named after the five faces of Siva, Sadyojatam, Isanam, Tatpurusham, Aghoram and Vamadevam.

பஞ்ச முகவாத்யம் 1000 ஆண்டுகள் பழமையான அதிக எடை கொண்ட கோயில்களில் இசைக்கப்பட்ட வெண்கலத்தாலான இசைக்கருவியாகும். இதன் ஐந்துமுகங்கள் சிவபெருமானின் ஐந்து முகங்களான சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம் மற்றும் ஈசானம் என்ற முகங்களை குறிக்கின்றன.

RAJA RAMA VARMA

It is an oil painting on canvas by Raja Rama Varma in 1910. It was presented by Sri R.Vasudeva Rao, a madras advocate in 1941. A scene from the legend Ramayana, it depicts Rama, the prince of Ayodhya accompanied by his brother Lakshmana, taking leave of their parents to commence on excile of fourteen years. Rama falls at the feet of Sumitra, Lakshmana's mother who gracefully bends to bless him.

ராஜா ராம வர்மாவால் 1910 ஆம் ஆண்டு துணியின் மீது எண்ணெய் வண்ண ஓவியமாக வரையப்பட்ட, இதில் இராமாயணக் காப்பியத்தில், அயோத்தி இளவரசரான இராமன் தன் தம்பி இலட்சுமணன் உடன் விசுவாமித்திர முனிவர் நடத்தவிருக்கும் யாகத்தினை காப்பதற்காக செல்லும் காட்சி உள்ளது. இராமன், தசரதர் பாதங்களில் விழுந்து வணங்குவதையும் தசரதர் ஆசி வழங்குவதையும் காணமுடிகிறது.

YASODHA AND KRISHNA

It is an oil painting on canvas by Raja Ravi Varma. The artist has used dark background in this painting in order to give more significance to the subjects. The child is embracing the mother on her shoulder. The lady wears the rich ornaments. The stones in the ornaments are glittering. She is leaning her head on the left hand.

ராஜா ரவி வர்மா என்பவரால் துணியின் மீது எண்ணெய் வண்ணத்தில் வரைந்த ஓவியமாகும். யசோதையுடன் கிருஷ்ணர் இருக்கும் தோற்றத்தின் தனித் தன்மையை வெளிப்படுத்துவதற்கு, ஓவியத்தின் பின்புலத்தில் இருட்டாகவும், முதன்மைக் காட்சிகள் வெளிர் மஞ்சளாகவும் வரையப்பட்டுள்ளது. தாயின் தோளை குழந்தை தழுவிக் கொண்டிருக்கிறது. விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை யசோதா அணிந்துள்ளார். யசோதா இடது புறமாக சாய்ந்திருப்பது போன்று வரையப்பட்டுள்ளது

MAYIL YAZH

A String Instrument, shaped like a peacock, variant of Yazh, - The 'Mayil' Yazh, having images of Indian freedom fighters, like Gandhiji, Jawaharlal Nehru, Lal Bahadur Shastri, Nethaji Subash Chandra Bose, Veerapandiya Kattabomman, Velu Nachiyar, V.O.Chidambaranar, Barathiyar, Thiruppur Kumaran, Rajaji, Kamarajar, etc.

மயில் போன்ற உருவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள நரம்பிசைக் கருவியான இந்த யாழில் காந்தியடிகள், ஜவஹர்லால்நேரு, லால்பகதூர்சாஸ்திரி, நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ், வீர பாண்டிய கட்டபொம்மன், வேலுநாச்சியார், வ..உ...சிதம்பரனார், பாரதியார், திருப்பூர்குமரன், ராஜாஜி, காமராஜர் முதலிய இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.



RAJA RAJA CHOLA COIN

This copper coin was issued by emperor Raja Raja I. On the obverse side, a standing human figure is shown and on the reverse side is a seated goddess and legend 'Sri Raja Raja' in Nagari is seen. This coin was issued between 985 to 1014 CE. This coin was unearthed from Thiruvaimoor, Thirukkuvalai Taluk, Nagapattinam District.

இது மாமன்னர் முதலாம் இராஜராஜன் வெளியிட்ட நாணயம் ஆகும். இதன் முன் பக்கத்தில் நின்ற நிலையில் ஒரு மனித உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் அமர்ந்த நிலையில் பெண் கடவுள் உருவமும் 'ஸ்ரீராஜராஜ' என்கின்ற வட மொழி பொறிப்பும் காணப்படுகிறது. இந்த நாணயங்கள் வெளியிடப்பட்ட காலம் கி.பி. 985 முதல் 1014 வரை ஆகும். இந்த நாணயம் திருச்சிராப்பள்ளியில் கிடைக்கப்பெற்றது.

SRINIVASA VAIKUNTHANATHA

Vishnu's left hand rests on his serpent throne a
his right forearm rests on his knee. The bronze
images is much the same as that of Srinivasa. The
image of Vishnu has the Srivasta mark. Both the
consorts wear patra kundalas.

வைகுந்த நாதரின் இடது கை அவரது நாகாசனத்தின் மீதும், அவரது வலது கை முன்புறம் முழங்காலின் மீதும் உள்ளது. இப்படிமத்தில் ஸ்ரீவத்ஸ முத்திரை உள்ளது. இரு தேவியரும் காதுகளில் பத்ர குண்டலம் அணிந்துள்ளனர்.

BRONZE BOWL

This decorated bronze bowl was excavated from the Nilgiris. It resembles that of the sacred ash receptacle of contemporary period. The floral designs of this bowl which is fabricated by the technique of rutting in the background of patination appear as golden embellishments . This decorated bronze bowl is a visual treat to the onlookers.

நீலகிரியில் இருந்து 1871 கி.பி. அகழ்ந்தெடுக்கப்பட்ட இந்த அலங்கரிக்கப்பட்ட கிண்ணமானது பச்சைக்களிம்பின் பின்னணியில் புடைப்பாக செதுக்கப்பட்டுள்ள மலர் வடிவங்கள், பிரகாசமான நிறத்தில் காண்பவர் கருத்தைக்கவரும் வகையில் அமைந்துள்ளது.

ARCHAEOLOGY



PG DIPLOMA IN EPIGRAPHY

Hon'ble Minister for Industries, Tamil Official Language, Tamil Culture and Archaeology inaugurated the two years course on Post-Graduate Diploma in Epigraphy on 31.12.2021

மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பினை 31.12.2021 அன்று தொடங்கி வைத்தார்கள்

SADAYAR KOVIL

The Sadaimudinathar temple built during the Pallava reign and later extended by the Chozhas is situated in the village, Thiruchinampoondi. This temple is mentioned in one of the Thevarams, and it served as an inspiration for constructing the Thanjavur Periya Kovil and Gangai Konda Chozhapuram.

பல்லவ மன்னர்களான நந்திவர்மன் III மற்றும் நிருபதுங்கனின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. கருவறையும் அர்த்த மண்டபத்தூண் ஏகதள விமானம் கொண்ட எளிமையான கோயிலாகும். இங்குள்ள இறைவன் திருச்சடை முடிவுடைய மகா தேவர் என இக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

KEEZHADI

சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வுத் தளத்தில் கி.மு. 580-இல் குடியேற்றம் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாட்டில் சங்க காலத்திலிருந்தே நகர நாகரிகம் இருந்ததற்கான சான்று நிரூபணமாகிறது. இப்பகுதியில் உள்ள 100 ஏக்கர் பரப்பில் இதுவரை சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொண்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட 13000-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் வைகை நதிக்கரையில் பண்டைய தமிழ் நாகரிகம் இருந்ததற்கு சான்று பகர்கின்றன.

The Keezhadi excavation site in the Sivagangai district gives insight into the settlement that belonged to 580 BCE. It proves urban civilization existed in Tamil Nadu since the Sangam age. The excavations conducted so far on just ten out of 100 acres of identified land have led to the discovery of 13,000 artifacts proving the existence of an ancient Tamil civilization that thrived on the banks of river Vaigai.

KORKAI

Korkai lies on the bank of river Tamiraparani in Thoothukudi. It settlement has been identified as a capital and port of the Pandya middle Sangam era . Silver punch marked (PMC) coin and black polished ware are proof of extensive trade relations between Tamil Nadu and various parts of India.

கொற்கை தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இடைச்சங்க காலத்தின் பாண்டிய நாட்டின் தலைநகராகவும் துறைமுகப்பட்டினமாகவும் கொற்கை விளங்கியுள்ளது. இங்கு கிடைக்கப்பெற்றுள்ள வெள்ளி முத்திரைக் காசுகள், கருப்பு வண்ணப் பூச்சு பெற்றுள்ள பானை, ஓடுகள் ஆகியவை மூலம் தமிழ்நாடானது கி.மு.6 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது தெரியவருகிறது.

ADICHANALLUR

Adichanallur, which dates back to 600 BCE is one of the most important urn burial-sites in India. The burial site, which lies on the bank of river Thamirabarani is found with remains of mostly Australoid, Southeast Asian, East Asian as well as others. The findings from Adichanallur are displayed in the Government Museum, Chennai.

ஆதிச்சநல்லூர் ஸ்ரீவைகுண்டம் வட்டம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வு மிக முக்கியமான ஈமச்சின்னங்களான முதுமக்கள் தாழிகள் வெளிக்கொணரப்பட்ட அகழாய்வு எனலாம்.

IRATTAI KOVIL

This twin temple is one of a kind as it contains two Shiva temples in the same compound. The two temples have the influence of Chozha architecture, with both temples having Vimanams. The temples were constructed by chieftains of Pazhuvettaraiyar – Kumaran Kandan and Kumaran Maravan of the 9th century CE.

ஒரே வளாகத்தில் இரண்டு சிவன் கோயில்கள் இடம் பெற்றுள்ளதால் இது இரட்டைக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. சோழர் காலத்திய கலைப்பாணியில் கட்டப்பட்ட இக்கோயில்கள் இரண்டு தள விமானங்களுடன் அமையப்பெற்றுள்ளன. இவ்விரு கோயில்களும் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் பழுவேட்டரையர் சிற்றரசர்களான குமாரன் கண்டன், குமாரன் மறவன் ஆகியோர்களால் கட்டப்பட்டுள்ளது.

KODUMANAL

Kodumanal village located in Erode by the northern bank of Noyyal river was once a flourishing trade and industrial center, proved by the excavations that uncovered habitation and burial sites, silver punch-marked coins, beads in different stages of manufacture, furnaces used for manufacturing steel, iron and copper along with evidence of textile production.

கொடுமணல் பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டத்திலுள்ள, நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தில் கொடுமணலானது "கொடுமணம்" எனக் குறிக்கப்பட்டுள்ளது. தொழில்கூடங்கள் கொண்ட தளமாகவும் வணிக ஊராகவும் கொடுமணல் விளங்கியது.

MANORA FORT

This 8-storied, hexagonal tower, 23-meters high overlooking the Bay of Bengal is the Manora Fort situated in the outskirts of Thanjavur. It was built by Maratha ruler Serfoji in 1815 to commemorate the successful advance of the British over Napoleon Bonaparte.

தஞ்சாவூருக்கு அண்மையில் வங்க கடலோரத்தில் எட்டு அடுக்குகளுடன் அறுகோண வடிவில் 23 மீட்டர் உயரத்தில் அமையப்பெற்றுள்ள மனோரா கோட்டை மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களால் கி.பி.1815-ஆம் ஆண்டு நேபோலியன் போனபார்ட்டை ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டதன் நினைவாக எழுப்பப்பட்டுள்ளது .

DUTCH TOMBS

The tomb is the earliest Dutch Tomb in the Nagapattinam District and is buult on top of a burial ground. These are very old cemeteries and the inscriptions in Dutch language are in Roman Script. These cemeteries were erected for Isaac Welsing Van Hoorn, Elisabet Mynta and Cornelius Clasen in 1667 CE, 1673 CE and 1680 CE respectively.

கி.பி.1667-இல் Isaac Welsing Van Hoorn என்பவருக்கும் கி.பி.1673-இல் Elisabet Mynta என்பவருக்கும் கி.பி.1680-இல் Cornelius Clasen என்பவருக்கும் எடுக்கப்பட்ட கல்லறைகள் இங்குள்ளன. இவ்விவரங்கள் டச்சு மொழியில் ரோமன் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள கல்லறைகளில் இதுவே பழமையான டச்சு கல்லறையாகும்.

TRANQUEBAR FORT

The Tranquebar Fort is second-largest Danish fort in the world situated on the shores of the Bay of Bengal, Tarangambadi meaning, “place of the singing waves” in Tamil. It was established in the 17th Century on the active international trading coast of Coromandel to support trade activities between the Chola Kingdom and Denmark.

தரங்கம்பாடி கோட்டை வங்காள விரிகுடாவின் கரையில் அமைந்துள்ள உலகின் இரண்டாவது பெரிய டேனிஷ் கோட்டையாகும், டிரான்குபார் என்பது டேனிஷ் மொழியில் "அலைகள் பாடும் இடம்" என்று பொருள். சோழ அரசிற்கும் டென்மார்க் அரசிற்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக இது 17 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது.

VEMBAKOTTAI

The Vembakottai site is on the bank of river Vaippar of the Virudhunagar district. Antiquities such as shell objects, terracotta ornaments, terracotta dice, glass beads were unearthed representing it's existence through the Microlithic period to Medieval period.

வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டத்திலுள்ள வைப்பாற்றங்கரையில் அமைந்துள்ளது. இங்கு நுண்கற்காலம் முதல் இடைக்காலம் வரை கிடைக்கப்பெறும் தொல்பொருட்களான சங்குப் பொருட்கள், சுடுமண் அணிகலன்கள், சுடுமண் தாயக்கட்டம், கண்ணாடி மணிகள் ஆகியன கிடைக்கப் பெற்றுள்ளன.

THANJAVUR PALACE

The Thanjavur Place constructed by Vijayaraghava Nayakka in 1550 CE presents a unique architectural blend. It has both Nayaka architecture as well as Maratha architecture. The Marathas made additions to the structure after their victory over it. It remains to be the residence of the Bhonsle royal family to this day.

இக்கோட்டை ஆயுதக் கோபுரம், சர்ஜா மாடி, மராட்டியர் தர்பார் மண்டபம் மற்றும் ஆயுத கோபுரத்திற்கு வட மேற்கில் உள்ள மணி கோபுரம் ஆகியவைகளை கொண்டுள்ளது. ஆயுதக் கோபுரம் 8 அடுக்கு மாடி கட்டிடம் கண்காணிப்பு மற்றும் ஆயுதங்கள் சேர்த்து வைக்கும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டது. நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்து ஓவியங்கள் மாராட்டியர் தர்பார் மண்டபத்தில் காணப்படுகிறது.



VETTUVAN KOVIL

The unfinished Vettuvan Kovil located in Kalugumalai, constructed during the Pandya reign in the 8th century survives as the only example of Monolithic temple architecture. This temple creates an illusion of a blooming lotus, carved from a 7.5 metres deep single rectangular slab.

கழுகுமலை என்னும் சிற்றூரில் அமைந்துள்ள பெரும்பாறையில் ஒரு பகுதியில் சுமார் 1.5x7 மீட்டர் என்கிற அளவிலும் 7.5 மீட்டர் ஆழத்திற்கும் தோண்டியெடுத்து கோயிலாக செதுக்கப்பட்டுள்ளது. 8-ம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த இக்கோயிலை உருவாக்கியவன் பாண்டியன் மாறஞ்சடையன். கருவறையின் விமானத்தில் தெய்வங்களின் சிற்பங்களும், பூதகணங்களும் செதுக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

THIRUMALAI NAYAKAR MAHAL

The royal residence, Thirulmalai Nayakar Mahal, built by Thirumala Nayaka in 1636 CE presents a harmony of Italian and Dravidian architecture. The residence constructed with foliated brickwork stands tall with rectangular floral ceilings, intricate stuccowork, and paintings on the arches resting on the pillars scaling up to 82 ft tall and 13ft wide.

மதுரையை ஆண்ட நாயக்க வம்ச அரசர்களில் திருமலை நாயக்கர் என்பவரால் கி.பி.1636 ல் கட்டப்பட்ட அரண்மனை. தர்பார் மண்டபம், நாடக சாலை மற்றும் பள்ளியறை ஆகிய பகுதிகளை கொண்டுள்ளன. இவ்வரண்மனை இந்திய-ஐரோப்பிய கட்டக்கலையுடன் சிற்ப வேலைப்பாடுகள் மற்றும் ஐரோப்பிய கலைப்பாணியிலான வளைவு அமைப்புகளையும் கொண்டுள்ளது. இங்குள்ள ஓங்கி உயர்ந்துள்ள பிரம்மாண்ட தூண்கள் மிகவும் பிரசிதிபெற்றவையாகும்.

SIVAGALAI



Sivagalai lies on the bank of river Porunai (Tamiraparani) in Eral taluk of Thoothukudi district. The settlement that has lived on the river bank is considered as an ancient Tamil settlement. The Radiometric date (AMS date) assigned to the paddy collected from the site goes back to 1155 BCE.

சிவகளை ஏரல் வட்டம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப்பழமையானதாகக் கருதப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நெல்லினை கரிமப் பகுப்பாய்வு செய்ததில் இதனின் காலம் பொ.ஆ.மு. 1155 என வரையறை செய்யப்பட்டுள்ளது.



GANGAIKONDA CHOZHEESWARAR

This temple was built by Isana Siva Pandita, the spiritual guru of Rajendra Chozha I. This village used to be known as Gangaikonda Chozhapuram and the deity as Gangaikonda Chozheeswarar. This stone temple consists of a three storeyed vimana, an ardha mandapa and a mudka mandapa. All the sculptures adorning the niches belong to the period of Rajendra Chozha I.

முதலாம் இராசேந்திர சோழனின் குருவான ஈசான் சிவ பண்டிதன் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. இவ்வூர் கங்கைகொண்டசோழபுரம் எனவும் வழங்கப்பட்டது. இக்கற்றளியில்மூன்று தளங்களையுடைய விமானம், அர்த்தமண்டபம், முகமண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. தேவகோஷ்டங்களில் உள்ள அனைத்துச் சிற்பங்களும் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தை சார்ந்தவை.



CHINNAYAN KULAM

This tank is believed to have been built about 16th - 17th century CE, by a local Chieftain called Chinnayan. Events from the epics Ramayana and Mahabharata as well as landscape scenes are well depicted in the steps and parapet wall of this square tank.

சின்னையன்குளம் என்று அழைக்கப்படும் இந்த குளம் கி.பி.16-17 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட குறுநில மன்னன் சின்னையன் என்பவர் கட்டியிதாக கருதப்படுகிறது. இக்குளத்தின் படிக்கட்டுகளிலும் தடுப்புச் சுவர்களிலும் இராமாயண மகாபாரத காட்டிகளும் இயற்கைக்காட்சிகளும் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

ARMAMALAI CAVE
A natural cave which was converted to a Jain Temple, this cave is known for it's paintings. The cave also has rock art, and the remains of Jain saints and was a treasure trove of Pallava antiquities. The paintings in the cave are thought to be medieval cave paintings.
வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகே மலையம்பட்டு ஊரிலிருந்து சுமார் 1 கி.மீ தொலைவில் ஆர்மாமலை குகை அமைந்துள்ளது. இந்த ஓவியங்கள் பல்லவர் காலத்தைச் சார்ந்தவை. சித்தன்னவாசலில் உள்ளதைப் போன்று மலர் வடிவமைப்புகளில் தாமரை அதிமாக இடம்பெற்றுள்ள உள்ளன.

THANJAVUR GIANT GRANARY

This giant granary for storing grains was constructed during the Nayak period by the Thanjavur King Ragunatha (CE 1600-1634). It is completely made of bricks and is more than 11 meters in height with a circumfrence of 24 meters. The total capacity of this famous granary is roughly 3000 kalam or measure.

தஞ்சாவூரிலிருந்து 20 கி.மீ தொலைவில் கும்பகோணம் சாலையில் திருப்பாலைத்துறை என்னும் ஊரிலுள்ள பாலைவனநாதர் கோயிலின் முதல் திருச்சுற்றில் நெற்களஞ்சியம் ஒன்று உள்ளது. கி.பி. 1600-1634-ல் தஞ்சையில் ஆட்சி செய்த ரகுநாத நாயக்கர் காலத்தில் இவை கட்டப்பட்டுள்ளது. இது சுமார் 12 மீட்டர் உயரமும் 24 மீட்டர் சுற்றளவும் கொண்டு முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. மூவாயிரம் கலன் தானியங்கள் சேமித்து வைக்கக்கூடிய நெற்களஞ்சியமாக உள்ளது

RAMALINGA VILASAM

This palace was built during the reign of "Kizhavan Sethupathi" (1674-1710 CE) the most popular king among the Sethupathi Kings. The palace building consists of a Durbar hall and an ostentatious dwelling area. The murals found in this building represent the life pattern of the Sethupathi kings, depicting their battles with the Maratha kings of Thanjavur and their friendship with European counterparts.

சேதுபதி மன்னர்களுள் கி.பி.1674 முதல் 1710 வரை மிகவும் சிறப்பாக ஆட்சி நடத்திய கிழவன் சேதுபதியின் காலத்தில் இவ்வரண்மனை கட்டப்பட்டது. இதில் சேதுபதி மன்னர்களது அவைக்களம், ஆடம்பரமிக்க வசிக்கும் பகுதிகள் போன்றவை அடங்கும். சேதுபதி மன்னர்களின் வாழ்க்கை முறை, தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களுக்கும் சேதுபதிகளுக்கும் இடையே நடந்த போர்கள், சேதுபதி மன்னர்களின் ஐரோப்பியத் தொடர்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பது இவ்வரண்மனையின் தனிச் சிறப்பாகும்.



SWASTHIK WELL

This ancient well was dug by the Pallava ruler Dhanthivarman around 800 CE. It is known for it's swastik shape and is the only one found in the state. The well is famous for its poetic inscription that expresses the need to perform good deeds all through life.

திருச்சியில் மண்ணச்சநல்லூர் கிராமத்திலுள்ள இக்கிணறு கி.பி.800ல் பல்லவ மன்னன் தந்திவர்மன் தோண்டி அமைக்கப்பட்டது. இக்கிணறு ஸ்வஸ்திகா வடிவத்தில் தமிழகத்தில் இங்கு மட்டுமே உள்ளது. இக்கிணற்றில் பாடல் வடிவில் உள்ள கல்வெட்டில் மக்கள் தங்களது வாழ்க்கையில் நன்னெறிகளை கடைபிடிக்கவும் நிலையாமையைப் பற்றியும் கூறுகிறது -

NOTES

தமிழ்நாடு அரசு

Government of Tamil Nadu

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

Tourism, Culture and Religious Endowments Department

Design : Jamila Habib

Cover Image : Aakash Selvan

Photographs : Aakash Selvan, Ajithkumar S, Amar Ramesh, Babu Logesh, K. Deva, Keerthana Balaji, L Ramachandran, Manoharan Govindarajan, Prathap Armumugam, S R Sai Sanjay Prasath, Sreenath, Srivatsan Sankaran and respective departmental archives.

Captions : Jayashree, Sahithya, Valliappan Ramanathan and respective departmental archives.